தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066


dinakani2023@gmail.com
RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்

KANI GYM
CALL:9894808044


| Vol: 02 | Issue: 247 | 4 Pages | 5.4.2025 | Friday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 247 | 4 பக்கங்கள் | 5.4.2025 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்**
**மற்றீண்டு வாரா நெறி**

**விளக்கம்:**
**கற்க வேண்டிய வற்றைக் கற்று இங்கு மெய்ப்பொருளைஉணர்ந்தவர், மீண்டும் இப்பிறப்பிற்கு வராத வழியை அடைவர்.**

## வக்பு மசோதாவை எதிர்ப்பது ஏன்? உத்தவ் தாக்கரே பேட்டி




மும்பை, ஏப்.5

வக்பு வாரிய திருத்த மசோதாவுக்கு நாங்கள் எதிர்ப்பு தெரிவிப்பதற்கு காங்கிரசின் அழுத்தம் காரணம் இல்லை என்று உத்தவ் தாக்கரே கூறியுள்ளார்.

வக்பு வாரிய திருத்த மசோதா குறித்து உத்தவ்சிவசேனாதலைவரும், முன்னாள் முதல்மந்திரியுமான உத்தவ் தாக்கரே நேற்று மும்பையில் நிருபர்களிடம் கூறியதாவது:வக்பு வாரிய திருத்த மசோதா நிறைவேற்றப்பட்டுள்ளது. இதில் சில நல்ல கூறுகள் உள்ளன. ஆனால் நீங்கள் வக்பு நிலத்தின் மீது கண்வைத்துள்ள நோக்கம் வேறு.

அந்த நிலத்தை அபகரித்து உங்களது தொழில் அதிபர் நண்பர்களுக்கு கொடுக்க விரும்புகிறீர்கள். இந்த போலித்தனத்தால் நாங்கள் மசோதாவை எதிர்க்கிறோம். கோவில் அறக்கட்டளைகள், தேவாலயங்கள், குருத்வாராக்களிடமும் நிலம் உள்ளது. நீங்கள் நாளை இந்த நிலங்கள் மீதும் கண்வைக்கலாம். வக்பு வாரிய திருத்த மசோதாவுக்கு நாங்கள் எதிர்ப்பு தெரிவிப்பதற்கு காங்கிரசின் அழுத்தம் காரணம் இல்லை.இவ்வாறு அவர் கூறினார்.

## 'திருச்சி சிவா இந்தியில் நன்றாக பாடுவார்' நிர்மலா சீதாராமன் பேச்சால் மாநிலங்களவையில் கலகலப்பு



புதுடெல்லி, ஏப்.5

நாடாளுமன்ற மாநிலங்களவையில் நேற்று வக்பு சட்டத்திருத்த மசோதா மீதான விவாதத்தில் திருச்சி சிவா எம்.பி. பேசினார். இந்த மசோதாவை எதிர்ப்பதாக அவர் குறிப்பிட்டார். இடையில் அவர், பா.ஜனதாவின் சுலோகமான "சப்கா சாத் சப்கா விகாஸ்" என்பதை சொல்ல முடியாததைப் போல அருகில் இருந்த உறுப்பினரிடம் கேட்டார்.

இதை கவனித்த நிதி மந்திரி நிர்மலா சீதாராமன், "திருச்சி சிவா இந்தி பாடலை நன்றாக பாடுவார் என்பது எல்லோருக்குமே தெரியும். ஆனால் அவர் 'சப்கா சாத் சப்கா'... என வார்த்தைகளை தேடிக் கொண்டிருக்கிறார். இந்தி தெரியாததைப் போல காட்டுகிறார்" என்று வேடிக்கையாக குறிப்பிட்டார்.

இதற்கு திருச்சி சிவா, "நான் ஆங்கிலத்தில் எழுதி வைத்து பாடுவேன். ஆனால் அதற்கான அர்த்தம் எனக்கு தெரியாது. யாராவது சொன்னால்தான் புரியும்" என்றார். வக்பு மசோதா மீதான சூடான விவாதத்தில் இந்த உரையாடல் அவையில் கலகலப்பை ஏற்படுத்தியது.

## புதிய அரசு அமையும்போது வக்பு திருத்த மசோதா ரத்து செய்யப்படும்மம்தா பானர்ஜி




கொல்கத்தா, ஏப்.5

மத்தியஅரசுகொண்டுவந்தவக்புதிருத்தமசோதா,நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் 12 மணி நேர விவாதத்துக்கு பின்னர் நள்ளிரவில் நிறைவேற்றப்பட்டது. இதனை மேற்கு வங்காள முதல்மந்திரி மம்தா பானர்ஜி கடுமையாக விமர்சித்துள்ளார்.இதுதொடர்பாக அவர் நிருபர்களிடம் கூறியதாவது:

நாட்டை பிரிப்பதற்காக வக்பு திருத்த மசோதாவை பா.ஜனதா கொண்டுவந்து நிறைவேற்றியுள்ளது. மத்தியில் உள்ள பா.ஜனதா அரசை அகற்றிவிட்டு, புதிய அரசு அமையும்போது இந்த மசோதா ரத்து செய்யப்படும். அதற்கான திருத்தத்தை நாடாளுமன்றத்தில் கொண்டு வருவோம். இவ்வாறு அவர் கூறினார்.

# சிவகங்கை மாவட்டம் காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் எஸ் மாங்குடி தமிழக முதல்வரிடம் நேரில் சந்தித்து கோரிக்கை

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் எஸ் மாங்குடி மாண்புமிகு தமிழக முதல்வர் திரு மு க ஸ்டாலின் அவர்களிடம் நேரில் சந்தித்து கோரிக்கை அளித்தார்கள்

1) காரைக்குடி தொகுயில் மகளிர் கலைக்கல்லூரி அமைத்திடவும்,

2) தேவகோட்டையில் அரசு உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்திடவும், மற்றும்

3) கண்ணங்குடியில் புதிதாக காவல் நிலையம்

4) NGGO காலனியில் புதிதாக காவல்நிலையம் அமைக்க வேண்டும் என மாண்புமிகு தமிழக முதல்வர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களைகாரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் எஸ். மாங்குடி அவர்கள் நேரில் சந்தித்து கோரிக்கையினை அளித்தார்கள்



## மானாமதுரை நகர்க்கழக திமுக செயற்குழு கூட்டம்: ரவிச்சந்திரன், பொன்னுச்சாமி, சேர்மன் மாரியப்பன் கென்னடி, வைஸ் பாலசுந்தரம், மயில்வாகனன், சண்முகப்ரியா பங்கேற்பு



சிவகங்கை மாவட்டக் கழக செயலாளர், மாண்புமிகு தமிழ்நாடு கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் அவர்களின் ஆலோசனையின் பேரில் மானாமதுரைநகர்க்கழகதிமுக செயற்குழு கூட்டம் நடைபெற்றது..

நகர் அவைத்தலைவர் ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், சட்டமன்ற மேனாள் உறுப்பினர் நகர்மன்றத்நலைவர் எஸ். மாரியப்பன் கென்னடி, துணைத்தலைவர் பாலசுந்தரம், பொருளாளர் மயில்வாகனம், மாவட்ட மகளிரணி கவுன்சிலர் சண்முகப்ரியா, ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மானாமதுரை நகர்க்கழக திமுக செயலாளர் க. பொன்னுச்சாமி , மாரியப்பன் கென்னடி, தொகுதி ஐடி விங் ஒருங்கிணைப்பாளர் ஜி. ஆர். பாலா ஆகியோர் கலந்து கொண்டு நகர்க்கழகப்பணிகளை பற்றியும் , பாக முகவர்கள் மற்றும் வாக்குச்சாவடி நிலைக்குழுவினரது பணிகளை பற்றியும் எடுத்துரைத்தனர்...

இந்தகூட்டத்தில்மாவட்டபிரதிநிதிகளான சுப்புராம், சிப்காட்காளியப்பன், ஜிம்மூர்த்தி , மீனவரணி பாஸ்கரன், கழக மூத்த முன்னோடி தீர்த்தான்பேட்டை முருகேசன், சிவாஜி,

இளைஞரணி கவுன்சிலர் மாரிக்கண்ணன், அதியமான் பொன்னுச்சாமி, ராஜேஷ், இலக்கிய அணி மோகனசுந்தரம், மேனாள் துணைச்செயலாளர் எம். எம். ராசு, மாணவரணி அறங்காவலர் கார்த்திக், செம்புக்குட்டி, வழக்கறிஞர் நாகராஜ், பன்னீர்செல்வம், நகர்க்கழக நிர்வாகிகள் கவுன்சிலர்கள் சோம சதீஷ்குமார் , ரயில்வே செல்லப்பாண்டி, வேல்முருகன், பாலாஜி, செல்வக்குமார் , அழகர்சாமி, தேன்மொழி விஜயகுமார், நாகஜோதி மணிகண்டன், பழனிக்குமார், தர்மா, ஆட்டோ கர்ணா, சங்கர், ராஜேந்திரன், பால்ராஜ் உள்ளிட்ட ஏராளமான நகர் திமுக வினர் கலந்து கொண்டனர்...

## பெருங்கமா நல்லூர் கிராமத்தில் வீர தீர வீர தியாகிகளின் 105ம் ஆண்டு வீர வணக்க நாள்



மதுரை மாவட்டம் சேடபட்டி ஊராட்சி ஒன்றியம் பெருங்கமா நல்லூர் கிராமத்தில் வீர தீர வீர செயல்களில் ஈடுபட்டு உயிர் தியாகம் செய்த தியாகிகளின் 105 ம் ஆண்டு வீர வணக்க நாள் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சியில் குற்ற பரம்பரை கைரேகை சட்டத்தை எதிர்த்து உயிர் தியாகம் செய்த நினைவு சின்னம் அமைக்கப்பட்டுள்ள இடத்திலும் மணி மண்டபத்திலும் காவல் துறை அதிகாரிகள் ஒத்துழைப்போடு தியாகிகள் வீர வணக்க நாள் அனுசரிக்கப்பட்டது இதில் அனைத்து கட்சி பிரமுகர்கள் நிர்வாகிகள், நிறுவனர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் .தி.மு.க, அ.இ.தி.மு.க, பாரதியஜனதா கட்சி ,நாம் தமிழர் கட்சி, பார்வர்ட் பிளாக் கட்சி. அ.ம.மு.க, கட்சி தமிழக வெற்றி கழக, போன்ற இதர கட்சிகளும், அனைத்து சர்வதேச கட்சிகளை சேர்ந்த அனைத்து கட்சியினரும், தலைவர்கள். மாநில செயலாளர்கள், மாவட்ட பொறுப்பாளர்கள், உறுப்பினர்கள் பொது மக்கள் மகளிர் அணியினர் பிரமலை கள்ளர் சமுதாய சங்கத்தினர், மற்றும் அனைத்து சமுதாய சார்ந்தவர்களும் கலந்து கொண்டு வீர வணக்கம் செலுத்தி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்

உங்கள் செய்திகள் நிகழ்ச்சிகள்
தினக்கனியில் வர வேண்டுமா
தொடர்புக்கு:9443699066
WHATSAPP CHENEL
DHINAKANI.COM




திருப்பூர் மாவட்டம் அவிநாசி ரோட்டில் உள்ள பூண்டி சிக்னல் அருகாமையில் கௌதம் என்பவர் சுமார் இருபது வயது மதிக்கத்தக்க நபர் வேகமாக வண்டியில் வந்து இன்னொரு வண்டியில் மோதாமல் இருப்பதற்காக வேகத்தை குறியந்த பொழுது நிலை தடுமாறி விழுந்து முகத்தில் மற்றும் கை கால்களில் அடிபட்ட நிலையில் கீழே விழுந்தார். அப்பொழுது வேகமாவக சென்ற நம்முடைய ஊடக கனி நல சங்கத்தில் உள்ள உறவுகளாகிய வடிவேல் அவர்களும் சிவப்பிரகாசம் அவர்களும் அவரை தூக்கி கொண்டிருந்த வேளையில் ஊடக கனி நல சங்கத்தின் மாவட்ட செயளாளராகிய நானும் (லாரன்ஸ்) கூட சென்று தூக்கி ஓரமாக வைத்து 108 க்கு போன் பண்ணி வரவரழைத்து அவரை ஆம்புலன்ஸில் ஏத்தி மருத்துவமைனைக்கு அனுப்பி வைத்தோம். இப்படியாக நமக்கு தெரிந்தவர் தெரியாதரவர் என அனைவருக்கும் உதவிட நம்முடைய ஊடக கனி நல சங்கம் அனைவரையும் அழைக்கிறது. நம்மால் முடிந்த உதவிகளை பிறருக்கு செய்து மகிழ்ந்திட வரவேற்கின்றோம்

## குன்றக்குடி சண்முகநாதர் கோவிலில் பங்குனி உத்திர திருவிழா கொடியேற்றும் துவக்கம்






சிவகங்கை மாவட்டம் குன்றக்குடி சண்முகநாதர் கோவிலில் பங்குனி உத்திரதிருவிழா அதிர்வெட்டு முழங்க கொடி ஏற்றத்துடன் தொடங்கியது ஆறுமுக கடவுள் உருவம் வரைந்து கொடிக்கு பூஜை செய்யப்பட்டது புனித நீர் கலசங்கள் பூஜை உடன் தொடங்கிய சண்முகநாதன் சன்னதி முன் உள்ள குடிமரத்திற்கு அபிஷேகம் செய்யப்பட்டது மேளதாளம் அதிர்வு வேட்டு முழங்க கொடி ஏற்றி வைக்கப்பட்டு தீபா ஆராதனை நடைபெற்றது ஏராளமான பக்தர்கள் பங்கேற்று தரிசனம் செய்தனர் தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெறும் திருவிழாவின் ஒன்பதாவது நாள் தேரோட்டம் பங்குனி உத்திரம் காவடிகள் பால்குடங்கள் திருக்கல்யாணத்துடன் விழா நிறைவு வரும்

## தமிழ்நாடு டாஸ்மாக் பணியாளர்கள் சங்கம் ஏ.ஐ.டி.யு.சி யின் மாநில செயற்குழு கூட்டம்



தமிழ்நாடு டாஸ்மாக் பணியாளர்கள் சங்கம்.ஏ.ஐ.டி.யு.சி யின் மாநில செயற்குழு கூட்டம் சிந்தாதிரிப்பேட்டை கோவூர் வைத்தியநாதன் தெரு. தோழர் ஏ.எம் கோபு அரங்கத்தில் ஏஐடியூசி சங்கத் தலைவர் பெரியசாமி, பொதுச்செயலாளர்தனசேகரன்ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

செயற்குழு கூட்டத்தை தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய ஏ ஐ டி யூ சி சங்கத் தலைவர் பெரியசாமி டாஸ்மாக் பணியாளர்களை பணி நிரந்தரம் செய்து அரசு பணியாளர்களுக்கு இணையான ஊதியம் இ.எஸ்.ஐ ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி பிப்ரவரி 11 காத்திருப்பு போராட்டம் நடத்திய போது மாண்புமிகு அமைச்சர் செந்தில் பாலாஜி அழைத்து பேச்சுவார்த்தை நடத்தி கோரிக்கைகளை நிறைவேற்ற முயற்சி செய்கிறேன் என உறுதி அளித்ததாகவும் ஆனால் இதுவரை அழைத்து பேசவில்லை வருகின்ற 21ஆம் தேதி மானிய கோரிக்கை மீதான விவாதத்தில் தங்களது 21 ஆண்டு கால கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என நம்புவதாக கூறினார்

தங்களுக்கு சாதகமான அறிவிப்பு வரவில்லை என்றால் மிகப்பெரிய அளவிலான போராட்டத்தை முன்னெடுப்போம் என கூறினார்

# திருமணம் செய்வதாக ஆசைவார்த்தை கூறி உல்லாசம்; காதலன் வீட்டு முன் இளம்பெண் தர்ணா: கோவை அருகே பரபரப்பு



சென்னை, ஏப்.5

சட்டப்பேரவையில் நேற்று பால்வளத்துறை மானிய கோரிக்கை மீதான விவாதத்துக்கு பதில் அளித்து, அமைச்சர் ராஜகண்ணப்பன் புதிய அறிவிப்புகளை வெளியிட்டார். அது வருமாறு:

★ பாலில் கலப்படத்தை கண்டறிய ரூ.6.45 கோடி மதிப்பீட்டில் 129 நவீன அகச்சிவப்பு பகுப்பாய்வு கருவிகள் வழங்கப்படும்.

★ பால் மற்றும் பால் உபபொருட்களின் விற்பனையை அதிகரிக்க ரூ.10 கோடி மதிப்பீட்டில் 500 ஆவின் பாலகங்கள் புதிதாக தொடங்கப்படும்.

★ ரூ.2000 கோடி கால்நடை பராமரிப்பு கடன் கூட்டுறவு சங்கங்களில் பால் வழங்கும் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும்.

★ 14 மாவட்ட ஒன்றியங்களில் ரூ.2.40 கோடி மதிப்பீட்டில் 30 தொகுப்பு பால் குளிர்விப்பான்கள் புதுப்பிக்கப்படும்.

★ தரமான பால் கொள்முதல் செய்ய ரூ.1.50 கோடியில் தேவையான பால் பரிசோதனை உபகரணங்கள் 165 பால் தொகுப்பு குளிர்விப்பு மையங்களுக்கு வழங்கப்படும்.

★ மாதவரத்தில் உள்ள மாநில மைய ஆய்வகம் ரூ.2.23 கோடி மதிப்பீட்டில் கூடுதல் உபகரணங்களுடன் மேம்படுத்தப்படும்.

★ 525 தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் ரூ.2.63 கோடி மதிப்பீட்டில் கணினி மயமாக்கப்படும்.

★விழுப்புரம், வேலூர், மாதவரம் ஆகிய இடங்களில் உள்ள பயிற்சி நிலையங்களில் ரூ.2.38 கோடி மதிப்பீட்டில் கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்படும்.

★ உம்பளச்சேரி இன பசுமாடுகளின் மரபணு மற்றும் உற்பத்தி திறனை மேம்படுத்தும் நோக்கில் ரூ.1.94 கோடி செலவில் தேசிய பால் பதிவு திட்டம் செயல்படுத்தப்படும்.

★ கறவை மாடுகள் கன்று ஈனும் இடைவெளியை குறைப்பதற்காக ரூ.1.73 கோடி மதிப்பீட்டில் 2000 மலடு நீக்க சிகிச்சை மற்றும் சினை பரிசோதனை முகாம்கள் நடத்தப்படும்.

★ தேசிய பால்வள ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் உணவு தொழில் நுட்ப கல்வி நிறுவனங்களுடன் இணைந்து புதிய வகை மதிப்பு கூட்டப்பட்ட பால் பொருட்கள் தயாரித்து விற்பனை செய்யப்படும்.

★ தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் பல்வகை சேவை மையங்களாக உருவாக்கப்படும்.

# 1 லஞ்சம் வாங்கிய கோவில் செயல் அலுவலர் கைது



ஒரு லட்சம் லஞ்சம் வாங்கிய திருக்கொள்ளிக்காடு பொங்கு சனீஸ்வரர் கோவில் செயல் அலுவலர் ஜோதி லஞ்ச ஒழிப்புத் துறையினரால் கையும் களவுமாக கைது செய்யப்பட்டார்

திருவாரூர் மாவட்டம் திருக்கொள்ளிக்காடு பொங்கு சனீஸ்வரர் கோயிலில் செயல் அலுவலராக பணியாற்றி வருபவர் ஜோதி. மேலும் இவர் மன்னார்குடி ஒத்தை தெருவில் உள்ள ஆனந்த விநாயகர் கோவிலிலும் செயல் அலுவலராக கூடுதல் பொறுப்பு வகித்து வருகிறார். சென்னையில் உள்ள பக்தர் ஒருவர் குடிநீர் வசதிக்காக ரூ 45 ஆயிரத்திற்கு சுத்திகரிக்கப்பட்ட கருவி வழங்கிஉள்ளார்இதனை அவர் வீட்டிற்கு சொந்த உபயோகத்திற்கு பயன்படுத்தியுள்ளார் கோவிலில் ஏலம் விடப்படும் பொருட்களின் தொகையினை முறையாக கணக்கில் காட்டப்படாமல் இருத்தல் போன்ற தொடர் செயல்களில் ஈடுபட்டு கொண்டிருந்ததாக கூறப்படுகிறது மேலும் திருக் கொள்ளிக்காடு பொங்கு சனீஸ்வரர் கோவிலில் பணியாற்றி வரும் எழுத்தர் ஆலத்தம் பாடி தொழுதுரைசோந்த சசிகுமார் 2015ம் ஆண்டு முதல் சம்பளம் நிலுவைத் தொகை ரூ 2 லட்சத்தி 86 ஆயிரம் ஒட்டு மொத்தமாக கொடுத்து கணக்கு முடிப்பதற்கு ஒரு லட்சம் ரூபாய் லஞ்சமாக கேட்டுள்ளார்.சசிகுமார் இது குறித்து திருவாரூர் மாவட்ட லஞ்ச ஒழிப்புத்துறை துணை காவல் கண்காணிப்பாளர் நந்த கோபாலிடம் புகார் அளித்துள்ளார்.

அதன்படி இன்று மன்னார்குடி ஆனந்த விநாயகர் கோவிலில் செயல் அலுவலர் ஜோதியிடம் சசிகுமார் ஒரு லட்சம் ரூபாய் ரசாயனம் தடவிய லஞ்ச பணத்தை கொடுக்கும் பொழுது அங்கு மறைந்திருந்த மாவட்ட லஞ்ச ஒழிப்புத்துறை துணை காவல் கண்காணிப்பாளர் நந்தகோபால் மற்றும் காவல் ஆய்வாளர்கள் சித்ரா , அனிதா ஆரோக்கியமேரி உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட லஞ்ச ஒழிப்புத் துறை காவல்துறை குழுவினர் ஜோதியை கையும் களவுமாக பிடித்து கைது செய்து வழக்கு பதிவு செய்துள்ளனர்

# மழை நீர் கால்வாய் கட்டிடப்பணிகள் நிறைவு - மக்கள் பணியில் உறுதியாக 35வது வார்டு மாமன்ற உறுப்பினர் சம்பத்



கோவை மாநகராட்சி 35வது வார்டில் உள்ள தியாகி குமரன் வீதியில், பொதுமக்கள் நீண்ட காலமாக எதிர்பார்த்த மழை நீர் வடிகால் கட்டிடம் தற்போது நிறைவு பெற்றுள்ளது.

குளறுபடி யான தண்ணீர் தேக்கமும், செல்லாத உபாதைகளும் பொதுமக்களுக்கு சிரமங்களை ஏற்படுத்திய நிலையில்,

இந்த புதிய வடிகால் அமைப்பதால், மழைக் காலங்களில் சாலைகள் வெள்ளம் காணும் நிலை தவிர்க்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இப்பணிகள் குறித்து வார்டு மாமன்ற உறுப்பினர் ★சம்பத்★ கூறியதா வது: "மக்கள் நலமே எனது முதன்மை. நீண்ட நாட்களாக அவர்கள் எதிர்பார்த்த இந்த மழைநீர் கால்வாய் திட்டம் தற்போது நிறைவேறி யதில் மகிழ்ச்சி. மேலும் வார்டின்வளர்ச்சிக்காகதொடர்ந்தும் பாடுபடுவேன்." பொதுமக்களும் இதற்காக நன்றி தெரிவித்து, சம்பத்தின் செயல்பாடுகள் பாராட்டுதலுக்குரியது எனக் குறிப்பி ட்டனர்.



புதுச்சேரி, ஸ்ரீ மணக்குள விநாயகர் பொறியியல் கல்லூரியின் கீழ் செயல்படும் வேளாண் அறிவியல் கல்லூரியின் இளநிலை இறுதி ஆண்டு பயிலும் மாணவர்கள் செல்லிபட்டு பகுதியில் கிராமப்புற தொழில்முனைவோர் விழிப்புணர்வு மேம்பாட்டு யோஜனா திட்டத்தின் கீழ் ஊரக தோட்டக்கலை பயிற்சி முகாமில் ஈடுபட்டு வருகின்றனர். இப்பயிற்சியில் ஒரு பகுதியாக மாணவர்கள் இன்று செல்லிப்பட்டு கிராமத்தில் அமுத கரைசல் தயாரிப்பு முறை பற்றி விவசாயிகளுக்கு செயல்முறை விளக்கம் அளித்தனர் மற்றும் விவசாயிகளுக்கு இயற்கை விவசாயத்தின் முக்கியத்துவம் பற்றியும் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.இந்த செயல் விளக்க கூட்டம் வேளாண் அலுவலர் தமிழ்செல்வன், திட்ட குழு தலைவர் முகமத்யாசின், திட்ட ஒருங்கிணைப்பாளர் .ஏ.கே.ராவ் கெலுஸ்கர் மற்றும் திட்ட மேற்பார்வையாளர் வி.மோகன் மேற்பார்வையில் நடைபெற்றது.

# மீண்டும் மஞ்சப்பை மீட்டெடுப்போம் மஞ்சப்பை என்ற விழிப்புணர்வு நிகழ்ச்சி



மீண்டும் மஞ்சப்பை என்ற நிகழ்ச்சி பாளையங்கோட்டை தூய யோவான் கல்லூரியில் சுயநிதி பாட பிரிவில் பயிலும் மாணவ மாணவிகள் 483 பேர் மற்றும் பேராசிரியர்கள் 13 பேர் மீண்டும் மஞ்சப்பை மீட்டெடுப்போம் மஞ்சப்பை என்ற விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது

இதில் சுற்றுச்சூழலை பாதிக்கும் பிளாஸ்டிக் பைகளை தவிர்த்து மஞ்சள் துணிப்பை பயன்படுத்த வேண்டும் நிகழ்ச்சியில் கல்லூரி தாளாளர் திரு ஜி ஜெயச்சந்திரன் அவர்கள் தொடங்கி வைத்தார்கள் திருஜி செல்வம்தாசில்தார்பேரிடர் மேலாண்மை திரு நெல்வேலி மாவட்டம் அவர்கள் முன்னிலை வைத்தார்கள் எக்கு பவுண்டேஷன் நிறுவனர் திரு விவேக் மற்றும் ஜேசி ஐ குழுவினர்கள் சாந்தி கல்லூரியின் துணை முதல்வர் பர்னபாஸ் ஜேக்கப் ஆகியோர் கலந்து கொண்டனர் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் மஞ்சள் துணிப்பை வழங்கப்பட்டது

இதில் மஞ்சப்பையன் பயன்கள் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் தாமிரபரணி ஆற்றின் சீர்கேடு குறித்து விளக்கினர் நிகழ்ச்சியினை முனைவர் பெலிக்ஸ் பேன்சி அவர்கள் ஏற்பாடு செய்தார்கள்

# சிவகங்கை மாவட்டம் உலக புறவுலக சிந்தனையற்றோர்கான ஆட்டிசம் விழிப்புணர்வு நிகழ்ச்சி: கலெக்டர் தலைமையில் நடந்தது



சிவகங்கை, ஏப்.5

சிவகங்கை மாவட்டம், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில், உலக புறவுலக சிந்தனையற்றோர்கான (ஆட்டிசம்) விழிப்புணர்வு நிகழ்ச்சி, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், இன்றையதினம் (03.04.2025) காரைக்குடி அழகப்பா பல்கலைகழக கூட்டரங்கில், சிறப்புப்பள்ளிகளின் சிறப்புக்குழந்தைகளை கொண்டு நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில்,

தமிழ்நாடு முதலமைச்சர் மாற்றுத்திறனாளிகளின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டு, மாற்றுத்திறன் கொண்டவர்களின் மறுவாழ்விற்கென எண்ணற்ற திட்டங்களை தமிழகத்தில் வழங்கி, அவர்களின் நலன் காத்து வருகிறார்கள். ஆண்டுதோறும் மாற்றுத்திறனாளிகள் தின விழா கொண்டாடப்பட்டு, அவர்களுக்கு தேவையான அனைத்து நலத்திட்ட உதவிகள் மற்றும் உதவி உபகரணங்கள் வழங்கப்பட்டு, அவர்களின் கோரிக்கைகள் மற்றும் தேவைகள் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

மேலும், ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 2 ஆம் தேதியன்று உலக புறவுலக சிந்தனையற்றோர் தினம் அனுசரிக்கப்பட்டு வருகிறது. இத்தினத்தினை முன்னிட்டு, புறவுலக சிந்தனையற்றோர் குறித்து, பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வகையில், மார்ச் 29 முதல் ஏப்ரல் 4 ஆம் தேதி வரையிலான காலத்திற்கு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்திடதிட்டமிடப்பட்டு, பல்வேறு நிகழ்வுகள் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் நடத்தப்பட்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாக அனைத்து அரசு அலுவலகங்களையும் நீல நிறத்தில் ஒளியூட்டுதல் வேண்டும் என்ற அடிப்படையில், நேற்றையதினம் (02.04.2025) அன்று சிவகங்கை மாவட்ட ஆட்சியரகம் முழுவதும் நீல நிறத்தில் ஒளியூட்டப்பட்டுள்ளது. அதனைத்தொடர்ந்து, இன்றையதினம் சிறப்புப்பள்ளிகளின் சிறப்புக்குழந்தைகளை கொண்டு, காரைக்குடி அழகப்பா பல்கலைகழகத்துடன் இணைந்து, விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மனம் கவருகின்ற வகையில் சிறப்பாக நடைபெற்றது.

மாற்றுத்திறனுடைய குழந்தைகளின் பெற்றோர்கள் விழிப்புணர்வுடன் இருத்தல் வேண்டும். தங்களது குழந்தைகளிடம் காணும் குறைபாடுகளின் அடிப்படையில், உடனடியாக அதற்குரிய மருத்துவ சிகிச்சைகள் மற்றும் பயிற்சிகளை சரிவர முறையாக பின்பற்றுவதன் மூலம் தங்களது குழந்தைகளிடம் தாங்கள் முன்னேற்றத்தினை உணரலாம்.

இவ்வகையான குறைபாடுகளுடைய குழந்தைகள் சமூகத்துடன் எவ்வித தொடர்புமின்றி இருப்பர். இவ்வாறாக உள்ள குழந்தைகளை கண்டறிவதற்கென அங்கன்வாடி பணியாளர்களுக்கும் உரிய பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், இச்சிறப்பு குழந்தைகளுக்கு பயிற்றுவிப்பதற்கென சிறப்பு கல்வியியல் படிப்பு பயின்றுவரும் அனைத்து மாணாக்கர்களுக்கும் இந்நிகழ்ச்சியில் எனது பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், வெளிநாடுகளில் மாற்றுத்திறனுடைய குழந்தைகளின் திறன்களை கண்டறிந்து, அவர்களின் சிறப்பு திறன்களில் அவர்களை முழுமையாக ஈடுபடுத்தி வருகின்றனர். அவ்வாறாக குழந்தைகளை ஈடுபடுத்துவதன் மூலம் அவர்களின் தனித்திறன்கள் வெளிக்கொணரப்படுவது மட்டுமன்றி, அவர்கள் மனரீதியாகவும் மகிழ்ச்சியுடன் இருப்பர்.

இன்றையதினம் சிறப்பாக நடைபெற்று கொண்டிருக்கும் இவ்விழிப்புணர்வு நிகழ்ச்சிக்கு மேலும் சிறப்பு சேர்த்திடும் வகையில், சிறப்பு குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகள் அமைந்தது சிறப்பிற்குரிய ஒன்றாகும். இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டுள்ள ஒவ்வொருவருக்கும் ஊக்கம் அளித்திடும் வகையில், அந்நிகழ்ச்சி அமைந்தது. இக்கலைநிகழ்ச்சியில் பங்கேற்ற அனைத்து சிறப்புக்குழந்தைகளுக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், மாவட்டத்திலுள்ளசிறப்புப்பள்ளிகளில் தேவையான அனைத்து வசதிகளும் மேம்படுத்தப்பட்டுவருகிறது. பெற்றோர்கள், சிறப்புப்பள்ளி ஆசிரியர்கள் மற்றும் சிறப்புக்குழந்தைகளுக்கான பயிற்றுநர்கள் அனைவரும் சிறப்புக்குழந்தைகளின் முன்னேறத்தில் தனிகவனம் செலுத்தி, அவர்களுக்கு உறுதுணையாக இருந்து, அவர்கள் வாழ்வில் வளம்பெற அடிப்படையாக இருந்திட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

முன்னதாக, உலக புறவுலக சிந்தனையற்றோர் தினத்தை முன்னிட்டு, பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வகையில், விழிப்புணர்வு கையெழுத்து இயக்கத்தினை சிறப்புப்பள்ளி குழந்தைகளுடன் கலெக்டர் தொடங்கினார்



தமிழக முதல்வர் தளபதியார் அவர்களின் நல்லாட்சியில் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அண்ணன் கே ஆர் பெரிய கருப்பன் அவர்கள் மாண்புமிகு நகர்புற வளர்ச்சித்துறை அமைச்சர் அண்ணன் கே என் நேரு அவர்கள் ஆலோசனையின் படியும் மானமிகு முன்னாள் அமைச்சர் அண்ணன் மூ தென்னவன் அவர்களின் வழிகாட்டுதலின்படி செயல்படும் மாண்புமிகு மேயர் அண்ணன்சே. முத்துத்துரை அவர்கள் காரைக்குடி மாநகரில் புதியதாக கட்டப்பட்டுள்ள தினசரி காய்கறி மா ர்க்கெட் கடைகளுக்கான குத்தகை ஆணையினை குத்தகைதாரார்கள் இடம் வழங்கினார் மற்றும் குத்தகைக்காரர்கள் காரைக்குடி மேயர் அவர்களுக்கு சால்வை அணிந்து மகிழ்ச்சி தெரிவித்துக் கொண்டார்கள்

# கல்லல் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் மாணவ மாணவியருக்கு இலவச மருத்துவ முகாம்



கல்லல் ஊராட்சி ஒன்றிய பள்ளி மாணவர்களுக்கு இலவசமருத்துவ நடைபெற்றது சிவகங்கை மாவட்ட கல்லல் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது மருத்துவ முகாமில் அரசு மருத்துவர்கள் பங்கேற்று 50க்கும் மேற்பட்டவர் மாணவ மாணவிகளுக்கு பொது மக்களுக்கு ரத்த அழுத்தம் சர்க்கரை நோய் போன்ற பல்வேறு நோய்களை மருத்துவ பரிசோதனை செய்து அதற்கான மருந்து மாத்திரை வழங்கினார்

# மானாமதுரை ரயில் நிலையத்தில் காவல் உதவி செயலில் பயன்படுத்துவது பற்றி விழிப்புணர் நிகழ்ச்சி



மானாமதுரை ரயில் நிலையத்தில் மானாமதுரை இரும்பு பாதை காவல் நிலைய உதவி ஆய்வாளர் வசந்தி தனுஷ்கோடி முருகேசன் ரயில்வே பாதுகாப்பு படை உதவி ஆய்வாளர்கள்சம்பத் நாகரத்தினம் மற்றும் மானாமதுரை ரயில் நிலைய அதிகாரி ஆகியோர் ரயில் பெண் பயணிகள் பாதுகாப்பு குறித்து ரயில்வே அவசர கால உதவி எண் 139.1512.வாட்ஸ் அப் எண் 9962500500மற்றும் காவல் உதவி செயலில் பயன்படுத்துவது பற்றி பயிற்சி கொடுக்கப்பட்டு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது

# தமிழக முதலமைச்சர் பிறந்தநாள் விழா: தேவகோட்டை முப்பையூரில் நீர்மோர் பந்தல் திறப்பு



கோடைகால வெய்யிலினால் பொதுமக்கள் அவதியடைவதை தடுக்கும் பொருட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத்தலைவர் மு. க. ஸ்டாலின் அன்மையில் கழக நிர்வாகிகளுக்கு அறிவித்ததன் அடிப்படையில். கூட்டுறவுத்துறைஅமைச்சர்கேஆர். பெரியகருப்பன்அவர்களின்ஆலோசனையின்பேரில் தேவகோட்டை முப்பையூரில் பொதுமக்களுக்காக நீர்மோர் பந்தல் திறக்கப்பட்டுள்ளது.

தேவகோட்டை தெற்கு ஒன்றியக்கழக செயலாளர் நாகானி ரவி, கழக மாணவரணி துணைச்செயலாளர் முப்பையூர் ஜெ. இராமகிருஷ்ணன் ஆகியோர் தலைமையேற்று திறந்து வைத்தனர்...

இந்த நீர்மோர் பந்தலில் மோர், இளநீர், வெள்ளரி, பப்பாளி, உள்ளிட்ட பழங்கள் பொதுமக்களின் தாகத்தை தீர்த்திட வழங்கப்பட்டது...

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட திமுக அயலக அணி துணை அமைப்பாளர் சீமான் சண். சுப்பையா, தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் முப்பையூர் சிவா, மாணவரணி தல கணேஷ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# திமுக தேர்தல் அறிக்கையில் தெரிவித்தபடி செப்டம்பர் மாதம் ஒரு குவிண்டால் நெல்லுக்கு ரூ.2,500 வழங்கப்படும்: எடப்பாடி கேள்விக்கு அமைச்சர் பதில்





சென்னை, ஏப்.5

திமுக தேர்தல் அறிக்கையில் தெரிவித்தபடி வருகிற செப்டம்பர் மாதம் ஒரு குவிண்டால் நெல்லுக்கு ரூ.2,500 வழங்கப்படும் என்று அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவித்தார். சட்டப்பேரவையில் நேற்று வேளாண் மானிய கோரிக்கை மீதான விவாதத்தில் எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி பேசும்போது, 2021 சட்டமன்ற பொதுத்தேர்தலின்போது திமுக தேர்தல் அறிக்கையில், ஆட்சிக்கு வந்தால் விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற நெல்லுக்கு ஒரு குவிண்டாலுக்கு 2,500 ரூபாய் வழங்கப்படும் என்று தெரிவித்தார்.

இன்னும் வழங்கப்படவில்லை. அதேபோல, ஒரு மெட்ரிக் டன் கரும்பிற்கு ஆதார விலையாக 4,000 வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதுவும் வழங்கப்படவில்லை. இந்த ஆண்டாவது வழங்கப்படுமா?

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்: இப்போது நெல்லுக்கு ஒரு குவிண்டாலுக்கு ரூ.2,050 தான். வருகிற காலத்தில் அது 2,500 ஆக வழங்குவதற்கு முன்பே அறிவிப்பு கொடுத்துவிட்டார்கள். இன்னும் அதுமட்டும் தான் குறையிருக்கிறது.

செப்டம்பர் மாதம், வருகிற சீசனில் அது மறுபடியும் ரூ.2,500 நெல்லுக்கு கொடுத்துவிடுவார்கள். கரும்பை பொறுத்தவரையில் கிட்டத்தட்ட ரூ.3,500 ஆக இருக்கிறது. இப்போது, தர்மபுரியில் பார்த்தால் கிட்டத்தட்ட அதே விலையேற்றம் வரும் போது டன் ரூ.4,000 வந்துவிட்டது. இருந்தாலும் வருகின்ற அடுத்த மாதங்களில் கண்டிப்பாக கரும்பு மெட்ரிக் டன்னுக்கு ரூ.4,000 வழங்குவதற்கான அறிவிப்பை முதல்வர் அறிவிப்பார் என்றார்.

# டாஸ்மாக்கில் ஈ.டி சோதனையை எதிர்த்த வழக்கை வேறு நீதிபதிகள் அமர்வுக்கு மாற்றக்கோரி முறையீடு




சென்னை, ஏப்.5

அமலாக்கத்துறை சோதனைக்கு எதிராக டாஸ்மாக் மற்றும் தமிழக அரசு தாக்கல் செய்த வழக்குகளின் விசாரணையை வேறு அமர்வுக்கு மாற்ற கோரி சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி அமர்வில் முறையீடு செய்யப்பட்டுள்ளது. டாஸ்மாக் தலைமை அலுவலகத்தில் அமலாக்கத்துறை நடத்திய சோதனையை சட்ட விரோதமானது என அறிவிக்க கோரியும், விசாரணை என்ற பெயரில் அதிகாரிகளை துன்புறுத்த தடை கோரியும் தமிழக அரசும், டாஸ்மாக் நிர்வாகமும் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தன.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் எம்.எஸ்.ரமேஷ் மற்றும் என்.செந்தில்குமார் அடங்கிய அமர்வு, விசாரணையில் இருந்து விலகியது. இதையடுத்து, வழக்கை நீதிபதிகள் எஸ்.எம்.சுப்பிரமணியம் மற்றும் கே.ராஜசேகர் அடங்கிய அமர்வு விசாரித்தது. இந்த வழக்கில் அமலாக்கத்துறை பதில் மனு தாக்கல் செய்தது. இந்த மனுவுக்கு பதில் அளிக்க தமிழக அரசுக்கு அவகாசம் வழங்கிய நீதிபதிகள், விசாரணையை வரும் 8ம் தேதிக்கு தள்ளி வைத்திருந்தனர்.

இந்நிலையில், நீதிபதி எஸ்.எம்.சுப்பிரமணியம் தலைமையிலான அமர்வில் இடம் பெற்றிருக்கும் நீதிபதி கே.ராஜசேகர், அமைச்சர் செந்தில் பாலாஜி தரப்பில் ஆஜராகும் வழக்கறிஞரின் சகோதரர் என்பதால், தமிழக அரசு தாக்கல் செய்த வழக்கின் விசாரணையை வேறு அமர்வுக்கு மாற்ற வேண்டும் என்று மூத்த வழக்கறிஞர் கே.எம்.விஜயன், தலைமை நீதிபதி கே.ஆர்.ஸ்ரீராம் தலைமையிலான அமர்வில் நேற்று முறையீடு செய்தார். இதைக்கேட்ட தலைமை நீதிபதி அமர்வு, இது சம்பந்தமாக நீதிபதி எஸ்.எம்.சுப்பிரமணியம் தலைமையிலான அமர்வில் முறையிடுங்கள். அந்த அமர்வு எடுக்கும் முடிவின் அடிப்படையில் நிர்வாக உத்தரவுகள் பிறப்பிக்கப்படும் என்று தெரிவித்தனர்.

# அண்ணா பல்கலை மாணவி பாலியல் விவகாரம் வழக்கை சிபிஐக்கு மாற்ற கோரி மனு: தமிழக அரசு பதில்தர ஐகோர்ட் உத்தரவு



சென்னை, ஏப்.5

அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள ஞானசேகரனுக்கு எதிரான வழக்குகளின் விவரங்களுடன் பதில் மனு தாக்கல் செய்யுமாறு தமிழக அரசுக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பா.ஜ.வை சேர்ந்த வழக்கறிஞர் ஏ.மோகன் தாஸ், சென்னை உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்த மனுவில், அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வன்கொடுமை வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள ஞானசேகரன் மீது இதேபோன்ற பாலியல் வன்கொடுமை உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட வழக்குகள் உள்ளன.

ஞானசேகரனுக்கு எதிரான வழக்குகளை தமிழக காவல் துறை விசாரித்தால் நியாயம் கிடைக்காது. எனவே, இந்த வழக்குகளை சிபிஐ அல்லது, சிறப்பு புலனாய்வு குழுவுக்கு மாற்றுமாறு உத்தரவிட வேண்டும் என கோரியிருந்தார். இந்த வழக்கை விசாரித்த தலைமை நீதிபதி கே.ஆர்.ஸ்ரீராம் மற்றும் நீதிபதி முகமது ஷபிக் அடங்கிய அமர்வு, ஞானசேகரனுக்கு எதிராக பதியப்பட்டுள்ள வழக்குகள் குறித்த விரிவான விவரங்களுடன் பதில் மனு தாக்கல் செய்யுமாறு தமிழக அரசுக்கு உத்தரவிட்டு, விசாரணையை ஜூன் 12ம் தேதிக்கு தள்ளி வைத்தது.

# உணவகங்களில் ஆய்வுக்கு செல்லும்போது உயர் நீதிமன்ற உத்தரவுகளை அதிகாரிகள் பின்பற்ற வேண்டும்: விக்கிரமராஜா வலியுறுத்தல்



சென்னை, ஏப்.5

தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு மாநில தலைவர் விக்கிரமராஜா வெளியிட்ட அறிக்கை: உணவுப் பாதுகாப்பு என்பது மிக மிக அத்தியாவசியமான ஒன்று. ஆனால், உணவுப் பாதுகாப்பு சட்டங்கள் இயற்றப்பட்ட போதும், அமல்படுத்தப்பட்ட போதும், உணவகங்களையோ, உணவக உரிமையாளர்களையோ அவர்களின் அன்றாட நிலைபாடுகளையோ, கொள்முதல் செய்யப்படும் உணவுப்பொருட்களின் தரத்தை பற்றியோ சிறிதளவும் யோசிக்காமல், சட்டங்கள் இயற்றி அமலாக்கப்பட்டுள்ளன.

இந்த சூழலில் ஏற்கனவே சென்னை உயர்நீதி மன்றம் அளித்த உத்தரவில் உணவுப் பாதுகாப்புத்துறை அதிகாரிகள், உணவகங்களில் ஆய்வு செய்கின்ற போது, அதை ஊடகங்களுக்கோ, செய்தியாளர்களுக்கோ, பேட்டி அளிக்கக்கூடாது என மிக அழுத்தமான ஓர் உத்தரவை அளித்து, இது போன்று பேட்டியளிப்பது பல ஆண்டுகளாக செயல்பட்டு, தனக்கென ஒரு அந்தஸ்தை தேடி வைத்திருக்கும் உணவகங்களின் செயல்பாடுகள் கேள்விக்குறியாக்கப்பட்டு, உணவக வணிகமே சீரழிந்து போகும் நிலை ஏற்படுகின்றது என கண்டிப்புடன் உத்தரவிடப்பட்டது.

எனினும், உணவுப் பாதுகாப்புத்துறை அதிகாரிகள் சென்னை திருவல்லிக்கேணியில் ஒரு சிறிய உணவகத்தில் ஆய்வு என்ற செய்தி வெளியிட்டு, அதன் காரணமாக சம்பந்தமில்லாத அந்த உணவக வணிகம் பாதிக்கப்பட்டதோடு, உணவக உரிமையாளர்களும் மன உளைச்சலுக்கு உள்ளாக்கப்பட்டு, தொழிலாளர்களும் வேலையிழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு, ஆய்வுக்குச் செல்லும் உணவுப் பாதுகாப்புத்துறை அதிகாரிகள், உயர் நீதிமன்ற உத்தரவுகளை கண்டிப்புடன் பின்பற்றி, உணவக வணிகத்தை பாதுகாத்து பொதுமக்கள் சேவையில் குறைபாடின்றி உணவகங்கள் செயல்பட ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# வக்பு வாரிய சட்டத் திருத்தம் பாசிஸ்ட்டுகளின் சூழ்ச்சியை முறியடிப்போம்: துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் உறுதி



சென்னை, ஏப்.5

'சட்டமன்றம், நீதிமன்றம், மக்கள் மன்றம் என அனைத்து தளங்களிலும் வக்பு வாரிய சட்டத் திருத்தத்தின் பாதகங்களை எடுத்துச் செல்வோம். பாசிஸ்ட்டுகளின் சூழ்ச்சியை முறியடிப்போம்' என துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார். இதுகுறித்து துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்ட பதிவு: இந்திய அரசியலமைப்புச்சட்டத்தின்மீது, மேலும் ஒரு தாக்குதலை பாசிஸ்ட்டுகள் நடத்தி இருக்கிறார்கள்.

இஸ்லாமிய மக்களின் உரிமைக்கும், விருப்பத்துக்கும் எதிராக வக்பு வாரிய திருத்தச் சட்டத்தை மக்களவையில் ஒன்றிய அரசு நிறைவேற்றியுள்ளதை வன்மையாகக்கண்டிக்கிறோம். திமுக உள்பட 232 எதிர்க்கட்சி எம்.பி.க்கள் புதிய சட்டத்திருத்தத்தை எதிர்த்த நிலையிலும், 288 பேர் ஆதரவோடு இதனை ஒன்றிய அரசு நிறைவேற்றி இருக்கிறது. பெரும்பான்மை எண்ணிக்கை என்பது நாட்டு மக்களுக்கு நன்மை செய்யவே தவிர, மக்களின் உரிமைகளை பறிப்பதற்கும், வஞ்சிப்பதற்கும் இல்லை என்பதை பாசிஸ்ட்டுகளுக்கு புரிய வைப்போம்.

இந்த சட்டத் திருத்தத்துக்கு எதிராக தமிழ்நாடு சட்டமன்றத்தில் கடந்த வாரம் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட நிலையில், "கழகம் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்படும்" என்று முதல்வர் இன்றைக்கு அறிவித்துள்ளார். சட்டமன்றம், நீதிமன்றம், மக்கள் மன்றம் என அனைத்து தளங்களிலும் வக்பு வாரிய சட்டத் திருத்தத்தின் பாதகங்களை எடுத்துச் செல்வோம். பாசிஸ்ட்டுகளின் சூழ்ச்சியை முறியடிப்போம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# வக்பு திருத்த மசோதா சிறுபான்மை சமூகத்தின் மீதான வெளிப்படையான தாக்குதல்: எஸ்டிபிஐ கண்டனம்

சென்னை, ஏப்.5

எஸ்டிபிஐ கட்சியின் தேசிய துணைத் தலைவர் முகமது ஷபி நேற்று வெளியிட்ட அறிக்கை: சிறுபான்மையினருக்கு எதிரான கொடூரமான வக்பு திருத்த மசோதாவை, எஸ்டிபிஐ கட்சி சட்ட ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் அனைத்து ஜனநாயக வழிகளிலும் எதிர்த்துப் போராடும். இந்த மசோதா, முழுவதும் தீங்கிழைக்கும் நோக்கத்துடன் வடிவமைக்கப்பட்டு, வக்பு சொத்துகளை அபகரிப்பதையும், முஸ்லிம் நிறுவனங்களின் சுயாட்சியை அழிப்பதையும் நோக்கமாகக் கொண்டு, முஸ்லிம் சமூகத்தின் மீது திட்டமிட்டு நடத்தப்படும் தாக்குதலாக உள்ளது.

பாஜ தலைமையிலான அரசாங்கம், அதன் வகுப்புவாத நிகழ்ச்சி நிரலால் உந்தப்பட்டு, இந்திய முஸ்லிம் சமூக மக்கள் மீதான அதன் ஆழமான விரோதத்தை மீண்டும் ஒருமுறை வெளிப்படுத்தியுள்ளது. ஒன்றிய அரசு சொல்வது போல, இந்த மசோதா சீர்திருத்தம் அல்ல; இது மத சிறுபான்மையினரின் அரசியலமைப்பு உரிமைகளுக்கு எதிரான வெளிப்படையான ஆக்கிரமிப்புச்செயலாகும்.

முஸ்லிம் அல்லாதவர்களை வக்பு வாரியங்களுக்குள் திணிக்க கட்டாயப்படுத்துவதன் மூலம், அரசாங்கம் இந்திய அரசியலமைப்பின் பிரிவு 26ல் குறிப்பிடப்பட்டுள்ள மத சுயாட்சியின் அடித்தளத்தையே மீறுகிறது. பாஜவின் வகுப்புவாத அரசியலும், பொறுப்பற்ற வெறுப்பு நடவடிக்கைகளும் இந்தியாவுக்கு பெரும் விலை கொடுக்கும், சமூக பிளவுகளை ஆழமாக்கும் மற்றும் அரசியலமைப்பு மதிப்புகளை குறைமதிப்பிற்கு உட்படுத்தும். ஆகவே, இந்த மசோதாவுக்கு எதிரான சட்ட மற்றும் ஜனநாயகப் போராட்டத்தில் இணைய எஸ்டிபிஐ கட்சி அழைப்பு விடுக்கிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# அண்ணன் ராம்குமார் வாங்கிய ரூ.3 கோடி கடனுக்காக என்னுடைய ரூ.150 கோடி சொத்தை முடக்குவதா? உயர் நீதிமன்றத்தில் நடிகர் பிரபு தரப்பு வாதம்



சென்னை, ஏப்.5

அண்ணன் ராம்குமார் பெற்ற 3 கோடி ரூபாய் கடனுக்காக எனக்கு சொந்தமான 150 கோடி ரூபாய் மதிப்பிலான சொத்துகளை முடக்க உத்தரவிட்டுள்ளதாக நடிகர் பிரபு தரப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் வாதிடப்பட்டது. நடிகர் சிவாஜி கணேசனின் பேரனும், நடிகருமான துஷ்யந்த், அவரது மனைவி அபிராமி ஆகியோர் பங்குதாரர்களாக உள்ள ஈசன் புரொடக்சன்ஸ் நிறுவனம் சார்பில் நடிகர் விஷ்ணுவிஷால், நடிகை நிவேதா பெத்துராஜ் உள்ளிட்டோர் நடிப்பில் ஜகஜால கில்லாடி என்ற படத்தை தயாரித்தனர். பட தயாரிப்புக்காக தனபாக்கியம் எண்டர்பிரைசஸ் நிறுவனத்திடம் 3 கோடியே 74 லட்சத்து 75 ஆயிரம் ரூபாய் கடன் வாங்கியிருந்தனர்.

இந்த கடனை திருப்பி செலுத்தாததால் வட்டியுடன் சேர்த்து 9 கோடியே 39 லட்சம் ரூபாயை வசூலிப்பதற்காக ஜகஜால கில்லாடி படத்தின் அனைத்து உரிமைகளையும், தனபாக்கியம் எண்டர்பிரைசஸ் நிறுவன நிர்வாக இயக்குனரிடம் ஒப்படைக்குமாறு உயர் நீதிமன்றம் நியமித்த மத்தியஸ்தர் கடந்த 2024ம் ஆண்டு மே 4ம் தேதி உத்தரவிட்டார். இந்த உத்தரவின்படி படத்தின் அனைத்து உரிமைகளும் வழங்கப்படவில்லை.

இதையடுத்து, மத்தியஸ்தர் தீர்ப்பை அமல்படுத்தும் வகையில், ராம்குமாரின் தந்தையான சிவாஜி கணேசனின் வீட்டை ஜப்தி செய்து பொது ஏலம் விட உத்தரவிடக் கோரி தனபாக்கியம் எண்டர்பிரைசஸ் நிறுவனம் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது. இந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்ற நீதிபதி அப்துல் குத்தூஸ், நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் வீட்டை ஜப்தி செய்ய உத்தரவிட்டார். இதையடுத்து, அன்னை இல்லம் வீட்டை ஜப்தி செய்ய பிறப்பித்த உத்தரவை நீக்கக் கோரி, நடிகர் பிரபு சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளார்.

இந்த மனு, நீதிபதி அப்துல் குத்தூஸ் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது, பிரபு சார்பில் ஆஜரான வழக்கறிஞர், இந்த விவகாரத்தில் மூன்றாம் நபரான எனது இல்லத்தை ஜப்தி செய்ய நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அதனை நீக்க வேண்டும். எனது சகோதரர் ராம்குமார் பெற்ற 3 கோடி ரூபாய் கடனுக்காக எனக்கு சொந்தமான 150 கோடி ரூபாய் மதிப்பிலான சொத்துகளை முடக்க உத்தரவிடப்பட்டுள்ளது. எனது வாழ்நாளில் இதுவரை ஒரு ரூபாய் கூட கடன் வாங்கியது இல்லை என்று வாதிடப்பட்டது.

அப்போது குறுக்கிட்ட நீதிபதி, ராம்குமார் உங்களுடைய சகோதரர் தானே? ஒன்றாக தானே வாழ்ந்து வருகிறீர்கள்? அந்த கடனை தற்போது நீங்கள் செலுத்திவிட்டு பின்னர் அவரிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாமே? என்று கருத்து தெரிவித்தார். இதற்கு பதிலளித்த பிரபு தரப்பு வழக்கறிஞர், இது போன்று அவருக்கு உதவ முடியாது. பலரிடம் ராம்குமார் கடன் வாங்கியுள்ளார் என்று கூறினார். இதைடுத்து, விசாரணையை நீதிபதி ஜூன் 5ம் தேதிக்கு தள்ளிவைத்தார்.

# மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோயிலில் பங்குனி பெருவிழா கொடியேற்றத்துடன் தொடக்கம்: 9ம் தேதி தேரோட்டம், 10ம் தேதி அறுபத்து மூவர் திருவிழா



சென்னை, ஏப்.5

மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோயிலில் வருடாந்திர பங்குனி பெருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கியது. 9ம் தேதி தேரோட்டமும், 10ம் தேதி அறுபத்து மூவர் திருவிழாவும் நடைபெற உள்ளது. சென்னையில் உள்ள சிவன் கோயில்களில் மிகவும்பிரசித்திபெற்றது கபாலீஸ்வரர் கோயில். இந்த கோயிலில் ஆண்டுதோறும் பல்வேறு விழாக்கள் சிறப்பாக கொண்டாடப்படும். குறிப்பாக ஆண்டுதோறும் 10 நாட்கள் நடக்கும் பங்குனி பெருவிழா வெகு விமர்சையாக கொண்டாடப்படுவது வழக்கம்.

அதன்படி, இந்த ஆண்டு பங்குனி பெருவிழா மற்றும் அறுபத்துமூவர்திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் கோலாகலமாக தொடங்கியது. இதையொட்டி, நேற்று நடந்த கிராம தேவதை பூஜையில் அம்மை மயில் வடிவில் சிவபூஜை காட்சியும், புன்னைமர வாகனம், கற்பகமர வாகனம், வேங்கைமர வாகன வீதி உலாவும் நடந்தது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு வழிபாடு செய்தனர். நாளை தேதி அதிகார நந்தி எழுந்தருளும் நிகழ்வும், வரும் 9ம் தேதி தேர் திருவிழாவும், 10ம் தேதி அறுபத்து மூவர் திருவிழாவும், 12ம்தேதி திருக்கல்யாண உற்சவமும் நடக்கிறது.

அதனை தொடர்ந்து வரும் 13ம்தேதி உமா மகேஷ்வர் தரிசனமும், பந்தம் பறி உற்சவமும் நடைபெற்று, 14ம்தேதி திருமுழுக்குடன் பங்குனி பெருவிழா நிறைவடைகிறது. 10 நாட்கள் நடைபெறும் விழாவில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கூடுவார்கள் என்பதால், பாதுகாப்பு முன்னேற்பாடுகளை கோயில் நிர்வாகமும், காவல்துறையும் செய்து வருகிறது. திருவிழாவையொட்டி நேற்று முதல் 12ம்தேதி வரை மயிலாப்பூர் பகுதியில் போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டுள்ளது. திருவிழா நாட்களில் கபாலீஸ்வரர் கோயிலை சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து கோயிலை நோக்கி வரும் வாகனங்கள் அனுமதிக்கப்பட மாட்டாது என்றும், வாகன ஓட்டுநர்களும், பொதுமக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் போக்குவரத்து காவல்துறை அறிவித்துள்ளது.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

5.4.2025

# பண்ருட்டி பலா உள்பட மேலும் 6 பொருளுக்கு புவிசார் குறியீடு

சென்னை, ஏப்.5

கும்பகோணம் வெற்றிலை, கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை மாணிக்கமாலைக்கு புவிசார் குறியீடு சமீபத்தில் கிடைத்தது. இந்நிலையில் பண்ருட்டி பலாப்பழம், பண்ருட்டி முந்திரி, புளியங்குடி எலுமிச்சை, விருதுநகர் சம்பாவத்தல், செட்டிகுளம் சின்ன வெங்காயம் மற்றும் ராமநாதபுரம் சித்திரைகார் அரிசி ஆகிய 6 பொருட்களுக்கு புவிசார் குறியீடு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் தமிழ்நாட்டில் புவிசார் குறியீடு பெற்ற பொருட்களின் எண்ணிக்கை 69 ஆக உயர்ந்துள்ளது.



பண்ருட்டி பலாப்பழம் சுவையில் எப்போதும் சோடை போகாது. மலைப் பிரதேசத்தில் கிடைக்கும் தேன்பலாக்களைப்போன்ற சுவை பண்ருட்டி பலாவில் இருக்கிறது என்கிறார்கள் அப்பகுதி மக்கள். தமிழகத்தின் 'லெமன் சிட்டி' என்று தென்காசி மாவட்டம், புளியங்குடி அழைக்கப்படுகிறது. அந்த அளவுக்கு எலுமிச்சை உற்பத்தி இங்கு மிகவும் பிரபலமாக உள்ளது. அதேபோல, புவிசார் குறியீடு பெற்றதன் மூலம் பண்ருட்டி முந்திரி வணிகம் மேம்படவும், அயல்நாடுகளுக்கான ஏற்றுமதி அதிகரிக்கவும் நல்லதொரு வாய்ப்பாக அமையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

"சித்திரைக்கார் என்பது ராமநாதபுரம் மாவட்டத்தின் பாரம்பரிய நெல் ரகம். இப்பகுதியில் சிவப்பு மட்டை, நொருங்கன் என்றும் இதனை அழைப்பர். இந்த நெல் ரகத்தில் கிடைக்கும் அரிசி அதிக நேரம் பசியை தாங்கக்கூடியது, அதிக ஊட்டச்சத்து உடையது, நோய் எதிர்ப்பு திறன் அதிகமாக உள்ளது'' என்று கூறப்படுகிறது.

# காசி விஸ்வநாதர் கோயில் குடமுழுக்கு விழாவிற்கு தடை

மதுரை, ஏப்.5

தென்காசியைச் சேர்ந்த நம்பிராஜன், ஐகோர்ட் மதுரை கிளையில் தாக்கல் செய்த பொதுநல மனு:

தென்காசி காசி விஸ்வநாதர் கோயில் செயல் அலுவலரின் வாய்மொழி உத்தரவின்பேரில், கோயில் பகுதியில் இருந்து 100 டிராக்டர்களுக்கு அதிகமான மண் அள்ளப்பட்டது. இதனால் கோயிலின் கட்டிடம் உறுதியிழந்து உள்ளது. எனவே 2023ல் கோயிலை மறுசீரமைப்பு செய்வதற்காக அரசு தரப்பிலிருந்து நிதி ஒதுக்கப்பட்டது. ஆனால் அந்த நிதி முறையாக பயன்படுத்தப்படவில்லை.



தென்காசி மாவட்ட உதவி ஆணையர் ஆய்வு செய்ததில் பணிகள் முழுமை செய்யப்படாததும், அரசின் பணம் மோசடி செய்யப்பட்டதும் கண்டுபிடிக்கப்பட்டது. அதோடு நாள்தோறும் இப்பணிகளை செய்தால் மட்டுமே ஏப். 7ம் தேதி குடமுழுக்கு நடைபெறுவதற்கு முன்பாக சீரமைப்பு பணிகளை முடிக்க இயலும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, சீரமைப்பு பணிகள் முழுமையாக நிறைவடையும் வரை குடமுழுக்கு நடத்த இடைக்கால தடை விதிக்க வேண்டும். இவ்வாறு கூறியிருந்தார்.

இந்த மனு நீதிபதிகள் ஜெ.நிஷாபானு, எஸ். ஸ்ரீமதி ஆகியோர் முன் நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள், "கோயில் சீரமைப்பு பணிகள் முழுமையாக நிறைவடையும் முன் குடமுழுக்கு நடத்துவது சரியல்ல. எனவே, குடமுழுக்கு நடத்த இடைக்கால தடை விதிக்கப்படுகிறது. கோயில் பணிகள் குறித்து சென்னை ஐஐடி குழு மற்றும் வழக்கறிஞர் ஆணையர் ஆகியோர் ஆய்வு நடத்தி ஏப். 21ல் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும்'' என்று உத்தரவிட்டு விசாரணையை தள்ளிவைத்தனர்.

# சிந்தாதிரிப்பேட்டை உணவகத்தில் சவர்மா சாப்பிட்ட 17 வயது சிறுவனுக்கு உடல்நலம் பாதிப்பு

சென்னை, ஏப்.5

சென்னை சிந்தாதிரிப்பேட்டையில் உள்ள பாலபவன் என்ற உணவகத்தில் சவர்மா சாப்பிட்ட 17 வயது சிறுவன் உடல்நலம் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். சிறுவன் தரப்பில் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் அடிப்படையில் உணவு பாதுகாப்பு துறையினர் உணவகத்தை ஆய்வு செய்து அபராதம் விதித்தனர். மேலும் சவர்மாவிற்கு பயன்படுத்தப்படும், சிக்கன், குடிநீர், மசாலா பொருட்கள் என, 6 விதமான உணவுப்பொருட்களின் மாதிரிகளை எடுத்து ஆய்வகத்திற்கு அனுப்பி உள்ளனர்.

# ஐகோர்ட் கிளை உத்தரவு எதிரொலி; சதுரகிரி கோயிலில் தினமும் தரிசிக்க பக்தர்களுக்கு அனுமதி: விருதுநகர் மாவட்ட நிர்வாகம் அறிவிப்பு

வத்திராயிருப்பு, ஏப்.5

மதுரை மாவட்டம், சாப்டூர் அருகே மேற்குத்தொடர்ச்சி மலையில் பிரசித்திபெற்ற சதுரகிரி சுந்தரமகாலிங்கம் மலைக்கோயில் உள்ளது. இங்கு கடந்த காலங்களில் தினமும் பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்ய அனுமதிக்கப்பட்டனர். 2015ம் ஆண்டு மலையில் ஏற்பட்ட காட்டாற்று வெள்ளத்தில் சிக்கி, 10 பக்தர்கள் உயிரிழந்தனர். இதனையடுத்து மாதந்தோறும் பிரதோஷம், அமாவாசை, பவுர்ணமி உள்ளிட்ட விசேஷ நாட்களில் மட்டுமே பக்தர்கள் கோயிலுக்கு செல்ல அனுமதி வழங்கப்பட்டு வருகிறது.



சதுரகிரி கோயிலுக்கு தினந்தோறும் செல்ல பக்தர்களை அனுமதிக்க வேண்டும் என ஐகோர்ட் மதுரை கிளையில் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம், பல்வேறு கட்டுப்பாடுகளுடன் தினந்தோறும் சதுரகிரிக்கு பக்தர்கள் செல்ல அனுமதி வழங்கியது.

இதுகுறித்து விருதுநகர் கலெக்டர் (பொ) டிஆர்ஓ ராஜேந்திரன் வெளியிட்டுள்ள அறிவிப்பில், தினமும் காலை 6 மணி முதல் 10 மணி வரை மட்டுமே சோதனைச்சாவடி வழியாக பக்தர்கள் அனுமதிக்கப்படுவர். பக்தர்கள் மாலை 4 மணிக்குள் திரும்பிவர வேண்டும்.

உரிய அனுமதியின்றி மலையில் தங்கினால் நடவடிக்கை எடுக்கப்படும். அனுமதிக்கப்பட்ட பாதை வழியாக மட்டுமே பக்தர்கள் மலைக்கு செல்ல வேண்டும். வேறு எந்த பகுதியிலும் நுழையக்கூடாது. மலையேற்ற பாதைகளிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் குப்பைகள் கொட்டப்படுவது தடை செய்யப்பட்டுள்ளது.

மலைக்குச் செல்லும் பக்தர்கள் அனைவரும், வனத்துறை சோதனைச் சாவடியில் முழுமையான சோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள். நீதிமன்ற வழிகாட்டுதல்களை முழுமையாகபின்பற்றிபொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து சதுரகிரி மலைக்கோயில் நுழைவாயில் கேட் நேற்று வனத்துறையால் திறக்கப்பட்டது. இன்று முதல் வழக்கம் போல் பக்தர்கள் தினந்தோறும் சுவாமி தரிசனம் செய்ய வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

# ஊதிய நிலுவை தொகை பெற ரூ.1 லட்சம் லஞ்சம் வாங்கிய பெண் செயல் அலுவலர் கைது: திருவாரூர் லஞ்ச ஒழிப்பு போலீசார் அதிரடி

மன்னார்குடி, ஏப்.5

திருவாரூர் மாவட்டம் கோட்டூர் அடுத்த திருக்கொள்ளிக்காடு கிராமத்தில் பிரசித்தி பெற்ற பொங்குசனீஸ்வரர் திருக்கோயில் உள்ளது. இக்கோயிலில் செயல் அலுவலராக இருப்பவர் சேலத்தை சேர்ந்த ஜோதி (40). மன்னார்குடி ஒத்தைதெரு ஆனந்த விநாயகர் கோயிலில் கூடுதல் செயல் அலுவலராகவும் வேலை பார்த்து வருகிறார். திருக்கொள்ளிக்காடு கோயில் எழுத்தரான, நாகப்பட்டினம் மாவட்டம் செம்பியவேலூர் கிராமத்தை சேர்ந்த சசிக்குமாருக்கு (50) கடந்த 10 வருடங்களாக ஊதிய நிலுவைத்தொகை இருந்து வந்ததாக கூறப்படுகிறது.

இதை பெற்று தர செயல் அலுவலர் ஜோதி ரூ.1 லட்சம் லஞ்சம் கேட்டுள்ளார். இதுபற்றி புகாரின்படி திருவாரூர் மாவட்ட லஞ்ச ஒழிப்பு போலீசார் ஆலோசனையின் பேரில் ரசாயனம் தடவிய ரூ.1லட்சத்துடன் சசிக்குமார் நேற்று மதியம் அந்த கோயிலுக்கு சென்று செயல் அலுவலர் ஜோதியிடம் பணத்தை கொடுத்தார். அப்போது லஞ்ச ஒழிப்பு போலீசார், செயல் அலுவலரை கைது செய்தனர்.

# 'நீட்' பயிற்சி மாணவி தற்கொலை



இடைப்பாடி, ஏப்.5

சேலம் மாவட்டம், இடைப்பாடி அருகே கொங்கணாபுரம் ஒன்றியம், புதுப்பாளையம் பெரியமுத்தையம்பட்டியை சேர்ந்தவர் செல்வராஜ் (43). தனியார் கம்பெனியில் வேலை செய்து வருகிறார். இவரது மனைவி சந்திரா. இவர்களுக்கு சத்யா(18) என்ற மகள், துளசிநாத் என்ற மகன் உள்ளனர். சத்யா ஜலகண்டாபுரத்தில் உள்ள நீட் பயிற்சி மையத்தில், கடந்த 10 மாதமாக படித்து வந்தார்.

தன்னால் அதிக மதிப்பெண் பெற முடியவில்லை என அடிக்கடி பெற்றோரிடம் புலம்பி வந்துள்ளார். பெற்றோர் ஆறுதல் கூறி வந்தனர்.

இந்நிலையில், கடந்த 31ம் தேதி, சத்யா எறும்பு பவுடரை குடித்து மயங்கி விழுந்தார். இதையறிந்த செல்வராஜ், உடனடியாக மகளை மீட்டு தனியார் மருத்துவமனையில் சேர்த்தார். அங்கு சிகிச்சை பலனின்றி நேற்று காலை அவர் உயிரிழந்தார்.

# மகனுக்கு ரேஸ் கார் ஓட்ட பயிற்சியளிக்கும் அஜித்




தமிழ் சினிமாவின் முன்னணி நடிகராக திகழும் அஜித்குமார், கார் பந்தய வீரரும் கூட. இந்த ஆண்டு தொடக்கத்தில் துபாயில் நடந்த கார் பந்தய போட்டியில் அவரது அணி 3ம் இடம் பிடித்து அசத்தியது. அதேவேளை கலைத்துறையில் ஆற்றி வரும் சிறந்த பங்களிப்புக்காக அஜித்குமாருக்கு, மத்திய அரசு பத்மபூஷண் விருது அறிவித்தது. இத்தாலியில் நடைபெறவுள்ள 12வது மிச்செலின் முகெல்லோ கார் பந்தயத்தில் அஜித்குமார் பங்கேற்ற ரேஸிங் அணி 3ம் இடம் பிடித்து அசத்தியது.

ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கத்தில் நடிகர் அஜித் குமார் தனது 63வது படமான 'குட் பேட் அக்லி' படத்தில் நடித்துள்ளார். மைத்ரி மூவி மேக்கர்ஸ் நிறுவனம் தயாரிக்கும் இந்த படத்துக்கு ஜிவி பிரகாஷ் இசையமைத்துள்ளார். இந்த படத்தில் அஜித்துடன் இணைந்து திரிஷா, பிரசன்னா, சுனில், அர்ஜுன் தாஸ், பிரபு உள்ளிட்ட பலரும் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்திருக்கின்றனர். இப்படம் வருகிற ஏப்ரல் 10ந் தேதி வெளியாக உள்ளது.

இந்த நிலையில், கார் பந்தயங்களை முடித்துக்கொண்டு, அஜித் சென்னை திரும்பியுள்ளார். சென்னை விமான நிலையத்தில், அவர் ரசிகர்களுடன் எடுத்துக்கொண்ட புகைப்படம் இணையத்தில் வைரலாகி வருகிறது.

அஜித்தை போன்று அவருடைய மகன் ஆத்விக்கும் கார் பந்தயத்தில் ஆர்வம் காட்டி வருகிறார். விளையாட்டில் ஆர்வம் உடைய ஆத்விக், சில நாட்களுக்கு முன்பு சென்னை வந்த கால்பந்தாட்ட நட்சத்திரம் ரொனால்டினோவை சந்தித்து வாழ்த்து பெற்றார்.

இந்நிலையில், மகன் ஆத்விக்கிற்கு சென்னையை அடுத்துள்ள இருங்காட்டு கோட்டையில் உள்ள கார்பந்தய ட்ராக்கில் அஜித் ரேஸ் கார் ஓட்டுவதற்கு கற்றுக் கொடுத்துள்ளார். இது தொடர்பான வீடியோ ஒன்று இணையத்தில் வைரலாகி வருகிறது.

# ரெடின் கிங்ஸ்லிசங்கீதா தம்பதிக்கு பெண் குழந்தை குவியும் வாழ்த்து



நடனத்தின் பக்கம் இருந்த ரெடின் கிங்ஸ்லியை இயக்குநர் நெல்சன் சினிமா பக்கம் அழைத்து வந்து `கோலமாவு கோகிலா' திரைப்படத்தில் நடிக்க வைத்தார். டாக்டர், பீஸ்ட், ஜெயிலர் உள்ளிட்ட படங்களில் நடித்துள்ளார். இவர் சின்னத்திரை நடிகை சங்கீதாவை திருமணம் செய்துகொண்டார். இவர்களின் திருமணம் மிகவும் சிம்பிளாக கோவிலில் நடந்தது. அதன் பிறகு வைத்த வரவேற்பு நிகழ்ச்சியில் பல முக்கிய பிரபலங்கள் கலந்துகொண்டனர். சங்கீதா திருமணத்திற்கு பின் தான் நடித்து வந்த சீரியல் தொடர்களிலிருந்து விலகிவிட்டார். இந்நிலையில் சங்கீதா மற்றும் ரெடின் தம்பதி கர்ப்பமாக இருப்பதாக இன்ஸ்டாகிராமில் சமீபத்தில் பதிவிட்டனர். பலரும் இந்த தம்பதிக்கு வாழ்த்துக்களை தெரிவித்து வந்தனர். அவ்வப்போது இன்ஸ்டாகிராமில் தனது புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை சங்கீதா பகிர்ந்து வந்தார். இதனை தொடர்ந்து இந்த தம்பதிக்கு தற்போது பெண் குழந்தை பிறந்திருக்கிறது. இது குறித்து தனது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டிருக்கும் ரெடின் கிங்ஸ்லி, ``உங்களின் வாழ்த்துகளுக்கும், ஆசீர்வாதங்களுக்கும் நன்றி. இளவரசி பிறந்திருக்கிறாள்" எனக் குறிப்பிட்டிருக்கிறார். ரெடின் கிங்ஸ்லி சங்கீதா தம்பதிக்கு திரைதுறையினர் பலரும் வாழ்த்துகளை தெரிவித்து வருகின்றனர்.

# நடிகை ஹன்சிகா மீதான வழக்கு... மும்பை போலீசார் பதிலளிக்க கோர்ட்டு உத்தரவு



நடிகை ஹன்சிகா தமிழில், எங்கேயும் காதல், ஒரு கல் ஒரு கண்ணாடி படத்தின் மூலம் பிரபலமடைந்தார். அதன்பின் பிரியாணி, சிங்கம் 2 உள்ளிட்ட படங்களில் நடித்தார். நடிகை ஹன்சிகா மோத்வானி தமிழ், தெலுங்கு, இந்தி, கன்னடம் ஆகிய மொழிகளில் நடித்துள்ளார். நடிகர் தனுஷ் உடன் 'மாப்பிள்ளை' திரைப்படத்தில் நடித்ததன் மூலம் தமிழில் அறிமுகமானார். பின்னர் 'எங்கேயும் காதல்', 'வேலாயுதம்', 'ஒரு கல் ஒரு கண்ணாடி' போன்ற தமிழ்த் திரைப்படங்களில் நடித்திருக்கிறார். மை 3 என்ற வெப் தொடரிலும் நடித்துள்ளார்.

இதனை தொடர்ந்து கடந்த 2020ம் ஆண்டு தொழிலதிபர் சோஹைல் கத்தூரியா என்பவரை திருமணம் செய்து கொண்ட ஹன்சிகா, அதன்பிறகும் தொடர்ந்து படங்களில் நடித்து வருகிறார். தற்போது அவர் கைவசம் 'ரவுடி பேபி', 'காந்தாரி' போன்ற படங்கள் உள்ள நிலையில், 'நிஷா' என்ற தெலுங்கு வெப் தொடரிலும் நடித்து வருகிறார்.

ஹன்சிகாவின் திருமணம் ஜெய்பூர் அரண்மனையில் கடந்த 2022ம் ஆண்டு நடைபெற்றது. ஹன்சிகாவின் திருமணம் முடிந்து 10 நாள்களுக்குள் அவருடைய சகோதரர் பிரசாந்த் மோத்வானி மனைவியுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக விவாகரத்துக் கோரி விண்ணப்பம் அளித்தார். பிரசாந்த் மோத்வானியும் அவரது மனைவி முஸ்கான் நான்சி ஜேம்ஸும் பிரிந்து வாழ்ந்துவருகின்றனர்.

# ஐ.எஸ்.எல். கால்பந்து: கோவா அணியை வீழ்த்தி பெங்களூரு எப்.சி. வெற்றி




13 அணிகள் இடையிலான 11வது இந்தியன் சூப்பர் லீக் (ஐ.எஸ்.எல்.) கால்பந்து தொடரில் லீக் மற்றும் பிளேஆப் சுற்றுகள் முடிவில் மோகன் பகான் சூப்பர் ஜெயன்ட்ஸ், எப்.சி. கோவா, பெங்களூரு எப்.சி., ஜாம்ஷெட்பூர் எப்.சி. ஆகிய அணிகள் அரையிறுதிக்கு முன்னேறின. ஒவ்வொரு அரையிறுதியும் இரண்டு ஆட்டங்கள் (உள்ளூர், வெளியூர்) கொண்டதாக நடத்தப்படுகிறது.

இதில் பெங்களூருவில் நேற்று நடைபெற்ற அரையிறுதியின் முதலாவது சுற்றில் பெங்களூரு அணி, எப்.சி. கோவா அணியை எதிர் கொண்டது. இந்த ஆட்டத்தில் பெங்களூரு எப்.சி. அணி 20 என்ற கோல் கணக்கில் எப்.சி. கோவாவை வீழ்த்தியது. 42வது நிமிடத்தில் கோவா அணியின் சந்தேஷ் ஜிங்கன் பந்தை தடுக்க முயற்சிக்கையில் தவறுதலாக பந்து அவர் மீது பட்டு கோல் வலைக்குள் சென்று சுய கோலாக மாறியது.

பெங்களூரு அணியின் எட்கர் மென்டேஸ் 51வது நிமிடத்தில் ஒரு கோல் அடித்தார். இவ்விரு அணிகளும் அரையிறுதியின் 2வது சுற்றில் வருகிற 6ந்தேதி மீண்டும் மோதுகின்றன. இதில் பெங்களூரு அணி 'டிரா' செய்தாலே இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்று விடலாம்.

இதைத் தொடர்ந்து ஜாம்ஷெட்பூரில் இன்று இரவு 7.30 மணிக்கு நடைபெறும் மற்றொரு அரைஇறுதியின் முதலாவது சுற்றில் ஜாம்ஷெட்பூர் மோகன் பகான் சூப்பர் ஜெயன்ட்ஸ் அணிகள் மோதுகின்றன.

# ஐ.பி.எல். கிரிக்கெட்: டாஸ் வென்ற ஐதராபாத் பந்துவீச்சு தேர்வு

ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் இன்று கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் நடைபெறும் 15வது லீக் ஆட்டத்தில் நடப்பு சாம்பியன் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி, முன்னாள் சாம்பியனான சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணியை எதிர்கொள்கிறது.

இதில் டாஸ் வென்ற சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணியின் கேப்டன் பேட் கம்மின்ஸ் பந்துவீச்சை தேர்வு செய்தார். இதையடுத்து கொல்கத்தா அணி முதலாவதாக பேட்டிங் செய்ய உள்ளது. இரு அணிகளில் இடம்பெற்றுள்ள வீரர்கள்;

சன்ரைசர்ஸ் ஐதராபாத்: அபிஷேக் சர்மா, இஷான் கிஷன், நிதிஷ் குமார் ரெட்டி, அனிகேத் வர்மா, ஹென்ரிச் கிளாசென், கமிந்து மெண்டிஸ், சிமர்ஜீத் சிங், பாட் கம்மின்ஸ், ஹர்ஷல் படேல், முகமது ஷமி, ஜீஷன் அன்சாரி.

கொல்கத்தா நைட் ரைடர்ஸ்: குயின்டன் டி காக், சுனில் நரேன், ரஹானே, வெங்கடேஷ் ஐயர், ரிங்கு சிங், ஆங்கிரிஷ் ரகுவன்ஷி, மொயீன் அலி, ஆண்ட்ரே ரஸ்ஸல், ஹர்ஷித் ராணா, வருண் சக்கரவர்த்தி, ரமன்தீப் சிங்.

# ஐ.பி.எல். 2025: தாயகம் திரும்பிய ரபாடா

ஐ.பி.எல். போட்டித் தொடரில் குஜராத் டைட்டன்ஸ் அணிக்காக தென் ஆப்பிரிக்க வேகப்பந்து வீச்சாளர் ககிசோ ரபாடா விளையாடி வருகிறார்.

இந்த நிலையில் அவர் தனிப்பட்ட காரணங்களுக்காக தாயகம் திரும்பி உள்ளதாக குஜராத் அணி நிர்வாகம் தெரிவித்துள்ளது. ஆனால் அவர் எப்போது இந்தியா திரும்பி மீண்டும் அணியில் இணைவார் என்பது குறித்து தெரிவிக்கவில்லை.

குஜராத் அணிக்காக முதல் இரண்டு போட்டிகளில் ரபாடா விளையாடினார். பஞ்சாப் அணிக்கு எதிராக 41 ரன்கள் விட்டுக்கொடுத்து 1 விக்கெட் வீழ்த்தினார். மும்பைக்கு எதிராக 42 ரன்கள் கொடுத்து 1 விக்கெட் வீழ்த்தினார்.

இந்த சூழலில் குஜராத் அணி நேற்று இரவு நடைபெற்ற பெங்களூருவுக்கு எதிரான போட்டியில் 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இந்தப் போட்டியிலும் ரபாடா விளையாடவில்லை. ரபாடாவுக்குப் பதிலாக அர்ஷத்கானுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது. அதை பயன்படுத்திக் கொண்ட அர்ஷத்கான், விராட் கோலியின் விக்கெட்டை வீழ்த்தினார். ரபாடாவுக்குப் பதிலாக மற்றொரு தென் ஆப்பிரிக்க வேகப்பந்து வீச்சாளர் ஜெரால்ட் கோட்ஜி அல்லது ஆப்கானிஸ்தான் ஆல்ரவுண்டர் கரிம் ஜன்னத்துக்கு வாய்ப்பு வழங்கப்படும் என்று கூறப்படுகிறது. குஜராத் அணி தற்போது புள்ளிகள் பட்டியலில் நான்காவது இடத்தில் உள்ளது, அவர்களின் முதல் மூன்று போட்டிகளில், இரண்டு வெற்றிகள் மற்றும் ஒரு தோல்வியுடன். அவர்களின் அடுத்த போட்டி ஏப்ரல் 6ம் தேதி அன்று சன்ரைசர்ஸ் ஐதராபாத்திற்கு எதிரான போட்டியாகும், அதன் பிறகு அவர்கள் ஏப்ரல் 9ம் தேதி ராஜஸ்தான் ராயல்சை எதிர்கொள்கிறார்கள்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.